# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS 93/2018 நாள். 15.02.2023**

**போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டடது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ச் கிளர்க் திரு. ராமன் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயபால் | **வயது** | 62 |
| **த/பெ. க/பெ.** | வடிவேல் கவுண்டர் | **மதம்** | |
| **முகவரி** | அகரம் | **தொழில்** | விவசாயம், அரசு பணி ஓய்வு |

**<u>பி.சா.2 ஆஜர். முதல் விசாரணை</u>**

**நான் இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பில் முதல் விசராணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டதாகும். பி.சா.ஆ.4 ஆவணம் கும்பாபிசேக அழைப்பிதழ் எங்கள் ஊர் திரௌபதிஅம்மன் அழைப்பிதழ் ஆகும். அதில் எனது பெயர் ஊர்கவுண்டர் என்பதற்கு அருகில் குறிப்பிடப்பட்டள்ளது. மேலும் பி.சா.ஆ.5 ஆவணமான மண்டல பூஜை அழைப்பிதழிலும் எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli
Date: 2023.02.15 15:56:16 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்**
**நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.**